RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ராஜம் கிருஷ்ணன் குறிஞ்சித் தேனின் இயற்கை ரசனை

ப. சாந்தி [அ] *

[அ] எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம் அறிவியல் மற்றும் மனித நேயவியல் புலம் மொழி பண்பாடு மற்றும் சமுதாயம்-துறை, இராமாபுரம், சென்னை- 89, இந்தியா,

# Rajam Krishnan Kurinjiththenin Iyarkairasanai

P. Shanthi [a, *]

[a] Department SRM Institute of Science and Technology Faculty of Science and Humanities – Department of Languages, Culture, and Society, Ramapuram, Chennai – 89. India

*Corresponding Author: santhitharun2012@gmail.com

Received: 30-11-2025
Revised: 06-03-2026
Accepted: 15-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Education is very important in human life. Education helps a person to think clearly and act wisely. Both literacy and education are essential for the development of an individual as well as society. Education removes ignorance and develops knowledge. Through education, a person learns good habits, discipline, and moral values. It helps people understand what is right and wrong and guides them to live a meaningful life. Education also plays a major role in economic development. Educated people get better employment opportunities and contribute to national growth. It helps reduce poverty and unemployment. In addition, education creates awareness about health, cleanliness, social responsibility, and equality. It encourages unity among people and promotes peace in society. Thus, education is the foundation for personal growth and national development. Everyone should realize the importance of education and make use of it to lead a better life.

**Keywords:** Maragadha Malai, Hatti, Kudi iruppu, Thevarpetta, Malaigalin sigarangal.

## முன்னுரை

இராஜம் கிருஷ்ணன் பல புதினங்களை பல களஆய்வு செய்து எழுதியுள்ளார். அதில் மதுரையில் பெண் குழந்தைகளை கொல்லப்படுவதை பற்றி களஆய்வு செய்து எழுதி உள்ளார். இவ்வாறே கரிப்பு மணிகள் என்கின்ற புதினத்தில் உப்பளத் தொழிலாளர்களைப் பற்றி எழுதியுள்ளார். நீலகிரி பகுதியில் வாழுகின்ற திராவிடப் பழங்குடி மக்களைப் பற்றி குறிஞ்சிதேன் புதினத்தில் கூறியுள்ளார். குறிஞ்சி தேனில் காணப்படும். இயற்கை வருணனையைப் பற்றி இராஜன் கிருஷ்ணன் கூறியிருப்பதைக் காணலாம்.

## இராஜம் கிருஷ்ணனின் முதல் புதினம்

இராஜம் கிருஷ்ணனின் முதல் புதினம் பெண் குரல் என்பதாகும். இதனைத் தொடர்ந்து பல புதினங்களை கள ஆய்வு செய்து எழுதியவர் மதுரையை சுற்றியுள்ள வட்டாரப் பகுதிகளைக்கண்டு திரட்டிய தகவல்கள் அடிப்படையில் எழுந்தது தான் மண்ணகத்துப் பூந்துளிகள் என்னும் புதினமாகும். மதுரை பக்கம் பெண் குழந்தைகள் கொல்லப்படுவதையும் விளக்குகிறது.

நெய்தல் நில மக்களின் வாழ்க்கையை கூறுவது நெய்தல் நில மக்களின் வாழ்க்கையைப் பற்றி யது மக்களின் பழக்க வழக்கங்கள், பழமொழிகளில் உவமைகள், வழக்குச் சொற்கள் என பலவற்றை ராஜன் கிருஷ்ணன் அலை வாய் கரையில் என்கின்ற புதினத்தில் கூறியுள்ளார். இதனைப் போலவே கரிப்பு மணிகள் என்கின்ற புதினத்தில் உப்பளத் தொழிலாளர்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

நீலகிரி மலைப்பகுதியில் வாழுகின்ற திராவிடப் பழங்குடி மக்களைப் பற்றி குறிஞ்சித்தேன் என்னும் புதனத்தில் கூறியுள்ளார். திராவிடரின் முக்கியமான பல பண்பாட்டுக் கூறுகளை இந்த புதனத்தில் கூறியுள்ளார் சேற்றில் மனிதர்கள்இ பாதையில் பதித்த சுவடுகள் என்பவை வளம் கொழிக்கும் தஞ்சை மாவட்டத்தில் பண்ணை தொழிலாளர்கள் படும் கொடுமைகளையும் அவர்கள் சுரண்டு வோரின் நிலைமையும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

அன்னையர் பூமி என்பது சோவியத்து யூனியன் சென்று வந்த பிறகு ராஜம் கிருஷ்ணன் எழுதிய புதினமாகும். பெண்ணியம் பற்றிப் பேசக்கூடிய புதினமாகும் கூட்டுக் குஞ்சுகள் என்னும் புதினம் சிவகாசிப் பட்டாசு ஆலைகளில் மக்கள் குறிப்பாக சிறுவர் சிறுமியர் படுகின்ற வேதனைகளைக் கூறியுள்ளார். வேறு பல நூல்களையும் இவர் எழுதியுள்ளார் அவரது புதினங்கள் எல்லாவற்றிலுமே பெண் பாத்திரங்கள் அழுத்தம் பெறுகின்றன. கட்டுரைகள், வாழ்க்கை வரலாறு, சிறுகதை போன்றவற்றையும் எழுதியுள்ளார். கனவு, களம், அவள் போன்ற சிறுகதைகளையும் இராஜகிருஷ்ணன் எழுதியுள்ளார். மரகத மலை குடியிருப்பின் வளமை மரகத மலை அழகு, எளிமை, ஆற்றல் அனைத்தையும் விளக்குகின்ற இந்த மலை யன்னையினது மடியினை தாயாகமாகக் கொண்டு வாழுகின்ற மக்களுக்கு அந்த மலையினது சிறப்புகளானது உடலோடும் உயிரோடும் கலந்திருப்பதில் வியப்புகள் இருக்குமோ?

மலைச்சரிவில் ஜோகி சாய்ந்திருத்தல் கார்த்திகை மாதத்தின் நிறைவு நாளில் அதன் பிற்பகலில் பசுங்கம் பளத்தை விரித்தாற் போல் பரந்து கிடந்த மலைச்சரிவில் ஜோகி சாய்ந்திருந்தான். அந்தச் சரிவோடு ஒட்டி நீண்டு செல்லும் குன்றில் காணும் குடி யிருப்புத்தான் அவனுக்கு உரிய இடமாகும். அவன் பிறந்த இடமானது குடியிருப்பைச் சுற்றிலும் மூன்று பக்கங்களிலும் மரகதக் குன்றுகள் சூழ தற்கால சோலைகள் சூழ்ந்த கானகங்கள் நீண்டு சென்று வெளி உலகச் சந்தடிகளும் வண்ண வாசனைகளும் போலி மின்னல்களுக்கும் அவ்விடத்தை எட்டி விடாதபடி மீண்டும் குண்டுகளைச்சுற்றி வளைத்துக் காத்து வந்தன. முப்புறமும் மரகத குன்றுகள் சூழ நடுவே விளங்கிய அந்த குடியிருப்புக்கு மரகத மலை குடியிருப்பு என்று பெயராகும். இராஜம் கிருஷ்ணன் அவர்கள் இந்த மலைச்சரவினை வளக்கிய விதத்தில் இருந்து அவரின் இயற்கையாகிய மலைகளின் இரசனையினை காண முடிகிறது.

குன்றுகளும் சிகரங்களும் கண்கொள்ளா காட்சியாக திகழ்தல் குன்றின் மேல் ஏறி வீடுகளும் அருகில் சென்று நோக்கினால் மேற்கே மடிப்பு மடிப்பாக நீலவானில் வண்ணத்தில் யானை மந்தை போல் குன்றுகளும் அவற்றுக்கெல்லாம் சிகரமாக 'தேவர் பெட்டா' என்று சொல்லப்படும் சிகரங்களும் கண்கொள்ளாக் காட்சிகளாகத் திகழ்கின்றது. கீழ்ப்புறத்தில் பசுங்குன்றுகளுக்கு அப்பால்வளைந்து வருகின்ற கானகங்களுக்கும் நடு நடுவே வெள்ளை சிவப்புப் புள்ளி போல சிதறி கிடக்கின்றன மேடு பள்ளங்களும் இயற்கை அன்னையின் பயங்கரம் கருணை என்னும் இரண்டு தன்மைகளை விளக்கு வன போன்று தோன்றுகின்றன.

ஜோகி துன்பத்தை காணாத இருத்தல் கீழ்வானில் மலைக்கு அப்பாலிருந்து ஆதவன் எழுப்பித்தேவர் சிகரத்துக்குப்பின் மறைகின்ற வரையிலும் ஜோகிக்கு வெளியிலுள்ள நாட்களில் வீட்டு சூழலில் தங்க விருப்பம் கிடையாது.

ஒன்பதே வயதானச்சிறுவனாக அவனுடைய உலகம் முழுவதும் விரிந்து பரந்த புற்சரிவுகளும் குன்றின் கீழ் நெளிந்து நெளிந்து பாம்பு போல் செல்லும் அருவியின் கரையும் அந்த குடியிருப்புகளுக்கும் தான் அந்த சிறுவனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அவனுடைய நாட்களில் துன்பத்தின் சாயையை அவன் காணவில்லை மகிழ்ச்சி இல்லாமல் இருந்தால்தானே துன்பமானது தலை காட்டும் ஜோகிக்கு அன்பான அம்மா உண்டு. சீலமே உருவெடுத்த அப்பாவும் உண்டு ஒத்த தோழர்களுக்கும் கதை சொல்வதற்கும் பாட்டியும் உண்டு பொழுதுகளானது இன்பமாய் நகர எருமைகளும் பசுக்களும் மேய்க்கும் பணியும் உண்டு அவனுக்கு எட்டிய உலகிற்கு அப்பால் ஆசை பரந்து போக, தூண்டும் பொருள் எதுவாக இருக்கும் இருக்காது.

ஜோகி விளையாட்டில் களைத்து சரிவில் சாய்ந்திருத்தல் ஜோகியினுடைய தோழர்களான ராமன், பெள்ளி, ரங்கன் கிருஷ்ணன் முதலியோர் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டே கீழிறங்கி அருவிக்கு அப்பால் வெகு தூரம் சென்று விட்டனர். ஜோகி ஓட்ட விளையாட்டில் களைத்து சாய்வில் சரிந்திருந்தான். அவர்களின் குடியிருப்புகளைச் சேர்ந்த எருமைகளுக்கும் பசுக்களும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நின்ற வண்ணம் மண்டிக்கிடக்கின்ற புல்லினை வெடுக்கு வெடுக்கு என்ற கடித்து இழக்கும் ஒலிகளானது அவன் செவிகளில் விழும்படி தன் காதைப் புற்பரப்போடு வளைத்துக் கேட்டுக் கொண்டிருந்தான் அது அவனுக்கு ஒரு விளையாட்டாகவே இருந்தது. ஜோகி எழுந்து உட்கார்ந்து தன்னுடைய அநுமானம் சரியா? என்று பார்ப்பவனை போல் ஓசை வந்த திசையில் தன்னுடைய பார்வையை செலுத்தினான் எருமைகளின் பெயர்கள் உட்கார்ந்து அசை போட்டுக் கொண்டிருந்தது சீலிப் பசு கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும் நீலி எருமையைக் காணவில்லை ராமன் வீட்டு எருமைக்கன்று மணி குலுங்க மேலிருந்து கீழே ஓடியது. தன்னுடைய ஊகமே சரி இல்லை என்று

ஜோகி மறுபடியும் புற்பரப்பில் காதை வளைத்து கொண்டு படுத்தான் சாப்பிடுகின்ற ஓசை கேட்டுக் கொண்டே இருந்தது அந்த ஓசையில் அலுத்து நீல வானைப் பார்த்துக்கொண்டு திரும்பிப்படுத்தான்.

கண்களை இடுக்கி கொண்டு நீல வானமும் குனிந்து தன்னையே பார்ப்பது போல் எண்ணியவனாய் நினைத்துப் பார்த்தான். சூரியன் இல்லாமல் உலகம் இல்லை வானில் இருக்கின்ற சூரியனை நேர்க்கண்ணால் பார்க்க முடியாது ஆனால் சூரியன் இல்லாமல் உலகமே இல்லை அவர்கள் வணங்கும் ஈசனின் உயிர்த்தோற்றம் அந்தச் சூரியன் ஜோகியின் தந்தை லிங்கையர் காலையில் எழுந்ததும் கிழக்கே உதிக்கின்ற சூரியனை நோக்கி கும்பிடுவார்.

ஒளியாகிய கடவுளை நீ வாழ்க, மலையை த்தந்து மண்ணைச் செழிக்க வைக்கும் மா வள்ளலே நீ வாழி எங்களுக்கோ உனது அருளையும் ஆசியையும் கொடுப்பாய் என்று பிரார்த்தனை கூறிக்கொண்டே எருமைகளையும் கன்றுகளையும் அவர் அவிழ்த்து விடுவார் அவர் வீடு திரும்பு கையில் சூரியன் தேவர் சிகரத்துக்கு அப்பால் சென்று விடுவான் அப்போது ஜோகியின் அம்மை மாதி வீட்டில் உள்ள இருளை நீக்குவதற்கு ஆமணக்கினை நெய்யூற்றித் தீபத்தில் மாடத்தில் அகல்விளக்கு ஏற்றி வைத்திருப்பாள் சூரியன் இல்லாத இரவு நேரத்தில் அவர்களின் வீட்டில் அந்த தெய்வத்தின் சின்னமாக விளங்குவது அந்த விளக்கு ஆகும்.அந்த விளக்கானது வீட்டில் இல்லாவிட்டால் நிலம் வளையாது மாடானது மடி சுரக்காது என்பதையெல்லாம் ஜோகி அறிவான். ஜோகிக்கோ இருள் என்றால் அச்சம் அதிகம் குறும்பர்கள் காடுகளில் வசிப்பவர்கள் அவர்கள் எப்போதும் இருளில் தான் இருப்பார்கள்.

## ஜோகியின் பாட்டியானவர் கதைகளை கூறுதல்

இருளில் தான் எவரும் அறியாமல் மந்திர மாயங்கள் செய்வார்கள் நாயாக, நரியாக, பூனையாக அவர்கள் வந்து மாயங்கள், தீமைகள் செய்த கதைகளை கூற கேட்டுக் கொண்டிருக்கின்றான் அது மட்டுமா? சூரியன் இல்லாத சமயங்களான இரவுகளில் தான் சிறுத்தையும் கரடியும் பன்றியும் உலவுகின்றன. அவர்கள் பயிரை கடித்து பன்றிகள் பாழ் செய்கின்றன. சூரியன் இருந்தால் இவைகள் வருமா? என்று இருளானது இல்லாமல் சூரியன் ஆகிய ஒளி இருந்தால் வாழ்க்கையில் எப்போதும் வெளிச்சம் பெறலாம் என்பதை விளக்குவதுப் போல ஜோசியின் பாட்டி ஜோகிக்கு கதையினை சொல்கின்றார்.

ராஜம் கிருஷ்ணன் இந்த உணர்வினை நாம் எவ்வாறு உணரலாம் என்றால் அறியாமல் என்னும் இருளானது அகழ்வதற்கு அறிவு என்னும் வெளிச்சம் இருந்தால் வெற்றி பெறலாம். என்னும் அறிய சிந்தனையினை பெற முடிகிறது.

## ஜோகியின் கற்பனைக்கு வெளிச்சம் வருதல்

வீட்டுக்குள் விளக்கு வைப்பது போல் நீள நெடுகஇ நிலத்தில் சோலையில் கொட்டிலில் ஆயிரம் ஆயிரம் விளக்குகளை வைத்து விட்டால் மலை முழுவதிலும் விளக்குகளாகவே நிறைத்து விட்டால் மரகத மலை முழுவதும் சுற்றிலும் விளக்குகள் போட்டு இருளின்றி அகற்றிவிட்டால் பகல் போல ஆகுமோ? இதுபோல் நீல வானம் தெரியுமோ? ஜோகியோதன்னுடைய கண்களை மூடிக்கொண்டால் அவன் கற்பனையின் அவனது உலகமெல்லாம் அகல் விளக்குகளின் ஒளிபடர்ந்தது ஆனால் வான் முழுவதும் அந்த ஒளி படருமோ? எட்டுமோ? என்ற எண்ணமும் தோன்றியது. இதிலிருந்து வாழ்க்கையின் உயரமானது வானத்தை விட உயரமானது என்கின்ற எண்ணத்தின் மூலம் எழுதியதாக நாம் இதனைக் கருதலாம்.

## உயர மரங்களில் விளக்குகள் பொருத்துதல்

ஜோகியினது கற்பனைக்கு அந்தக் காட்சியோ ஏட்டவில்லை உயர உயரக் கம்பங்கள் நட்டு விளக்குகளை வைக்கலாம். ஓங்கி வளர்ந்து இருக்கின்ற கானக நெடு மரங்களான கற்பூர மரங்களில் அதாவது (யூகாலிப்டஸ்) மரங்களில் அந்த விளக்குகளை பொருத்தலாம். பெரிய பெரிய மண் சட்டிகளில் நிறைய எருமை நெய்யினையோ, ஆமணக்கெண்ணெயோ ஊற்றிப்பெரிய திரிகளை இட்டு மலைகளில் மீதெல்லாம் வைக்கலாமா? என்றெல்லாம் ஜோகிக்கு கற்பனை வருகிறது அவனுக்கு இருளினை அகற்ற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருப்பதனை காணமுடிகிறது.

## முடிவுரை

ராஜம் கிருஷ்ணன் அவர்கள் நீலகிரி பகுதி திராவிட பழங்குடி மக்களின் வாழ்க்கை முறைகளை கூறியுள்ளார். இருளினை அகற்றி வெளிச்சத்தினை எவ்வாறு கொண்டு வர வேண்டும் என்ற எண்ணமானது மக்களிடம் ஓங்கி வளர வேண்டும் என்று கூறியுள்ளதாகவும் நாம் உணரலாம்.

## References

Rajam Krishnan, (2018) Kurinjiththen, Publisher Dr.K.Sivaramalingam, Mangadu, Chennai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License